*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி-சென்னை-4*
*16 08 2025 SATURDAY 12.40 PM*
*ஆகாஷ்வாணி*

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

- *சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதற்காக, முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் பங்களிப்பு இன்றளவும் ஊக்கம் அளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*
- *வேளாண்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.*
- *தமிழக அமைச்சர் திரு ஐ பெரியசாமிக்கு தொடர்புடைய இடங்களில் அமலாக்கத்துறையினர் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.*
- *ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு கூடுதல் வரி விதிக்கப்படமாட்டாது என்று அமெரிக்கா சூசகமாக தெரிவித்துள்ளது.*
- *இத்தாலியில் நடைபெற்ற சர்வதேச படகு போட்டியில் இந்தியாவின் Shreya Krishna வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*--- இனி விரிவான செய்திகள் ---*

*<<<<<<<>>>>>>*

*சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதற்காக, முன்னாள் பிரதமர் பாரத்ரத்னா, அடல் பிஹாரி வாஜ்பாயின் பங்களிப்பு இன்றளவும் உக்கம் அளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*அடல் பிஹாரி வாஜ்பாயின் நினைவு தினத்தையொட்டி சமூக வலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.*

*அனைத்துத்துறையின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றியவர் அடல் பிஹாரி வாஜ்பாய் என்றும் பிரதமர் புகழாரம் சூட்டியுள்ளார்.*

*இந்நாளையொட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா விடுத்துள்ள செய்தியில், வளர்ச்சி மற்றும் சிறந்த நிர்வாகத்திற்கு அடித்தளம் அமைத்தவர் அடல் பிஹாரி வாஜ்பாய் என்று குறிப்பிட்டுள்ளார்.*

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள செய்தியில். நாட்டின் நலனுக்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் அடல் பிஹாரி வாஜ்பாய் என்று கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் தலைமையில் பொக்ரான் அணு ஆயுத சோதனையை வெற்றிகரமாக நடத்திய பெருமைக்குரியவர் என்றும் புகழாரம் சூட்டியுள்ளார்.

இதன்மூலம் இந்தியர்கள் ஒருபோதும் உலக நாடுகளுக்கு சளைத்தவர்கள் இல்லை என்றும் நிரூபித்துக்காட்டியர் அடல் பிஹாரி வாஜ்பாய் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளையொட்டி புதுதில்லியில் உள்ள அடல் பிஹாரி வாஜ்பாய் நினைவிடத்தில் தலைவர்கள் பலர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

<<<<<<<>>>>>>

வேளாண்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ஷிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், வேளாண்துறை அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து மக்களின் வாழ்க்கையில் ஆக்கப்பூர்வமான மாற்றங்களை கொண்டுவர உறுதிபூண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

பீகாரில் முதலீடு செய்ய முன்வரும் தொழில்நிறுவனங்களுக்கான சிறப்பு பொருளாதார தொகுப்புத் திட்டத்தை அம்மாநில முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் அறிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் ஒரு கோடி இளையோருக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்ற நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இளையோர் சுயதொழில் புரிய தொடர்ந்து ஊக்கம் அளிக்கப்படும் என்றும் திரு நிதிஷ்குமார் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

*ஹரியானாவில் போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு நயாப் சிங் சைனி கூறியுள்ளார்.*

*சண்டிகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார்.*

*சட்டம் – ஒழுங்கு சீராக பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதற்கு தமது அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாகவும் திரு நயாப் சிங் சைனி கூறினார்.*

*<<<<<<>>>>>>*

*திரிபுராவில் உள்ள அரசு அலுவலகங்களில் சூரிய மின்சக்தி பயன்பாட்டிற்கு ஊக்கம் அளிப்பதென அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.*

*இதற்காக அனைத்து அரசு அலுவலகங்களிலும் சூரிய மின்சக்தி தகடுகள் அமைக்கப்பட உள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*மாற்று எரிசக்தி பயன்பாட்டிற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>>*

*மத்தியப்பிரதேசத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்தனர்.*

*Shivpuri மாவட்டத்துக்கு உட்பட்ட தேசிய நெடுஞ்சாலையில் மினி பேருந்து ஒன்று லாரி மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.*

*<<<<<<>>>>>>*

*தெலங்கானாவில் மூன்றாம் பாலினத்தினரை தொழில் முனைவோர்களாக உருவாக்குவதற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.*

*ஹைதராபாத் மாநராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சிறு தொழில் நிறுவனங்களை தொடங்குவதற்காக மூன்றாம் பாலினத்தவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*இவர்களுக்கு இந்த பயிற்சிக்கு பின்னர் ஒரு கோடியே 15 லட்சம் ரூபாய், 155 பேருக்கு விடுவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.*

<<<<<<<>>>>>>

*பிஜேபி-யுடன் எந்தவித கருத்து வேறுபாடும் இல்லை என்று ஆர் எஸ் எஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு Ram Madhav கூறியுள்ளார்.*

*செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், நாட்டின் வளர்ச்சிக்காக பிஜேபி-யும், ஆர் எஸ் எஸ்-ம் பாடுபட்டு வருவதாக கூறினார்.*

*பிஜேபி அரசியல் ரீதியாக செயல்படுவதாகவும், ஆர் எஸ் எஸ்-ஐ பொறுத்தவரை அரசியல் இன்றி பணியாற்றி வருவதாகவும் அவர் கூறினார்.*

*காங்கிரஸ் உட்பட எந்த கட்சியை சேர்ந்தவர்களும் ஆர் எஸ் எஸ்-ல் இணையலாம் என்றும் திரு Ram Madhav தெரிவித்தார்.*

<<<<<<<>>>>>>

*நாகாலாந்து ஆளுநர் இல.கணேசனின் உடல் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக சென்னையில் வைக்கப்பட்டுள்ளது.*

*தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் உட்பட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் இல.கணேசன் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.*

*சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இல. கணேசன் நேற்று மாலை காலமானார்.*

<<<<<<<>>>>>>

*தமிழகத்தில் திமுக-வை சேர்ந்த அமைச்சர் திரு ஐ பெரியசாமிக்கு தொடர்புடைய இடங்களில் அமலாக்கத்துறையினர் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.*

*திண்டுக்கல்லில் நான்கு இடங்களில் இந்த சோதனை நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(Voice Byte – ராஜசேகரன் –27 Sec. )*

<<<<<<<>>>>>>

*சுற்றுலா வளர்ச்சியில் தமிழகம் முன்னணியில் உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.*

இதற்காக மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தமிழக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் வருவாயும் தொடர்ந்துஅதிகரித்து வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2020-ஆம் ஆண்டில் 49 கோடி ரூபாயாக இருந்த இதன் வருவாய், தற்போது 243 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து தமிழகத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு கூடுதல் வரி விதிக்கப்படமாட்டாது என்று அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் சூசகமாக தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், ரஷ்யாவிலிருந்து 40 சதவீத கச்சா எண்ணெயை இந்தியா இறக்குமதி செய்வதாக கூறினார்.

இதற்காக கூடுதல் வரி விதிப்பது பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால், கூடுதல் வரி விதிப்பதற்கான முடிவு கைவிடப்படுவதற்கான வாய்ப்புள்ளதாக திரு டொனால்டு ட்ரம்ப் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்று கனமுதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கோவாவின் ஒரு சில பகுதிகளில் அதிகனமழை பெய்யக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அஸ்ஸாம், மேகாலயா உத்தராகண்ட், மகாரஷ்ட்ரா. தெலங்கானா, மத்தியப்பிரதேசம், குஜராத் மாநிலங்களுக்கு உட்பட ஒரு சில பகுதிகளில் கனமுதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

*இதேபோல், நாகலாந்து, அருணாச்சலப்பிரதேசம், மணிப்பூர், மிசோரம், திரிபுரா, சட்டீஸ்கர், ஆந்திரா, கேரளா, கர்நாடகா மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளிலும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*<<<<<<<>>>>>>*

*இதற்கிடையே, ஜம்மு காஷ்மீரில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட Kishtwar -ல் உள்ள குடியிருப்புப்பகுதிகளை முதலமைச்சர் திரு ஓமர் அப்துல்லா இன்று பார்வையிட்டார்.*

*அப்பகுதி மக்களிடம் சேதம் குறித்து அவர் விரிவாக கேட்டறிந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*பெருமழை மற்றும் வெள்ளம் காரணமாக 60 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 100-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் ஜம்மு காஷ்மீர் அரசு கூறியுள்ளது.*

*<<<<<<<>>>>>>*

***விளையாட்டுச் செய்திகள்***

*இத்தாலியில் நடைபெற்ற சர்வதேச படகு போட்டியில் இந்தியாவின் Shreya Krishna வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*மகளிர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*<<<<<<<>>>>>>*

*Saipan சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanya Hemanth பட்டம் வென்றார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 15-10, 15-8 என்ற செட் கணக்கில், ஜப்பானின் Kanae Sakai-ஐ வென்றார்.*

*<<<<<<<>>>>>>*

*மலேசியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Devika Sihag இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 11-15, 15-9, 16-14 என்ற செட் கணக்கில் இந்தியாவின் Tasnim Mir -ஐ வென்றார்.*

*<<<<<<<>>>>>>*